# இயேசு தமது முதல் சீஷர்களை அழைத்தார்

**இயேசுவைப் பின்பற்றுவதில் உள்ள மகிழ்ச்சியைப் பற்றி சிறுவர்களுக்கு போதிக்கவும்.**

பிள்ளைகளின் வயதுக்கும் தேவைக்கும் ஏற்ற செயல்பாடுகளைத் தெரிந்தெடுக்கவும்.

ஜெபம் : "கர்த்தாவே! சுவிசேஷங்களில் இருந்து உமது வாழ்க்கையைப் பற்றி மற்றவர்களுக்குக் கூற பிள்ளைகளுக்கு உதவுவீராக."

இயேசு சீஷர்களை அழைத்த கதையை போதிக்க ஆயத்தம் செய்யவும். மத்தேயு 4:18-22 ஐ வாசிக்கவும். தமது ஊழியத்தை எடுத்துச் செல்லவும், தம்மைப் பற்றிய நற்செய்தியைப் பரப்பவும் இயேசு எவ்வாறு சீஷர்களைத் தெரிந்து கொண்டார் என்பதை இந்தப் பாடம் கூறுகிறது.

ஒரு பெரிய பிள்ளை இந்தக் கதையை வாசிக்கட்டும் அல்லது மனப்பாடமாகக் கூறட்டும். பின் இந்தக் கேள்விகளைக் கேட்கவும்.

- இயேசு அழைப்பதற்கு முன் பேதுருவும் அந்திரேயாவும் என்ன செய்து கொண்டு இருந்தார்கள் (வச. 18).
- அவரைப் பின்பற்றினால் அவர்களை என்னவாக ஆக்குவதாக இயேசு கூறினார்? *(வச. 19).*
- எவ்வளவு சீக்கிரமாக அந்த இரு மனிதர்களும் இயேசுவைப் பின்பற்றினார்கள்? *(வச. 20).*
- மீன் பிடிப்பவர்களாக இருந்த வேறு இரு மனிதர்கள் யார் யார்? *(வச. 21).*
- இயேசுவை அவர்கள் உடனடியாக பின்பற்றிய போது யாரை படகில் விட்டுச் சென்றனர்? *(வச. 22).*



மத்தேயு 10:2-4 ல் காணப்படும் 12 சீஷர்களின் பெயர்களை **மனனம் செய்யவும்.**

இயேசு சீஷர்களை அழைத்த கதையின் ஒரு பகுதியை நாடகம் ஆக்குக.

- ஆராதனையின் முக்கிய தலைவரோடு பேசி பிள்ளைகள் இந்த நாடகத்தை அரங்கேற்ற ஏற்பாடு செய்க.
- பெரிய பிள்ளைகள் சிறுவர்களுக்கு ஆயத்தம் செய்வதில் உதவட்டும்.

- இயேசு, சீமோன் (பின்னர் பேதுரு என்று பெயர்) அந்திரேயா, கதை கூறுபவர் (கதைச்சுருக்கம் கூறி, பிள்ளைகள் நடிக்க, பேச வேண்டியவற்றை ஞாபகப்படுத்துவர்) ஆகிய பாத்திரங்களைப் பெரிய பிள்ளைகளோ, பெரியவர்களோ ஏற்றுக் கொள்ளலாம்.
- யாக்கோபு, யோவான், செபுதேயா, அவர்களுடைய தகப்பன், பிற மீனவர்கள் வேடத்தை சிறுவர்கள் ஏற்கலாம். பேசின், ஸ்டூல் போன்றவற்றை கவிழ்த்துப் போட்டு படகாகவும், கயிறுகளை வலையாகவும் பயன்படுத்தலாம்.

**கதைகூறுபவர் :** கதை அல்லது அதன் பகுதியைக் கூறி, பின் “சீமோன் அந்திரேயாவிடம் கூறுவதைக் கேளுங்கள்.”

**சீமோன்** : (ஒரு படகின் அருகில் அமர்ந்தவாறு) அந்திரேயா! அதோ பார்! அவர்தான் நசரேயனாகிய இயேசு! அவர் மக்களைக் குணப்படுத்துகிறார். அவர் போதிப்பவற்றை நான் விரும்புகிறேன்! ஆனால் அவரோ மிகவும் நல்லவர்! சிறப்பு வாய்ந்தவர்! அதனால் நம்மை அவர் பார்க்கவே மாட்டார்.

**அந்திரேயா** : ஆமாம்! சீமோன்! அவர் மிகவும் நல்ல போதகர்! நமது உதவி அவருக்கு தேவை இல்லை.

**இயேசு** : சீமோனே! அந்திரேயாவே! வாருங்கள்! என்னைப் பின்பற்றுங்கள்! மனிதர்களைப் பிடிக்க எனக்கு உதவுங்கள்!

**சீமோனும் அந்திரேயாவும்:** துள்ளி எழுந்து, வலைகளைப் போட்டுவிட்டு, இயேசுவை நோக்கி ஓடுகிறார்கள்.

**இயேசு** : யாக்கோபே! யோவானே! நீங்களும் என்னைப் பின் தொடர்ந்து வாருங்கள்!

**யோவானும் யாக்கோபும் :** துள்ளி எழுந்து இயேசுவினிடத்தில் செல்கிறார்கள். செபுதேயா: எல்லா வேலையையும் தகப்பனாகிய என்னிடம் விட்டுவிட்டு அவர்கள் போய்விட்டார்கள் . நல்லது, அதுவும் நன்மைக்கு என்றே எண்ணுகிறேன்.

**மற்ற மீனவர்கள் :** நாடகம் ஆரம்பிக்கும் போது தரையில் உட்காருகிறார்கள். செபுதேயா பேசும்போது எழுந்து யோவானையும், யாக்கோபையும் நோக்கிக் கூறுகிறார்கள் “முட்டாள்கள்”, “அவர்கள் தங்கள் படகுகளை விட்டுவிட்டுப் போய்விட்டனர்”, “ஒரு நல்ல வேலையை விட்டுவிட்டு அவர்கள் அந்தப் போதகரைப் பின்பற்றிப் போய்விட்டார்கள்!”

**கதைகூறுபவர் :** நாடகம் முடிந்தபின், அதற்கு உதவிய யாவருக்கும் நன்றி கூறுகிறார்.

**கேள்விகள் :** குழந்தைகள் இந்த நாடகத்தைப் பெரியவர்களுக்கு முன் நடித்தால், மேலே பட்டியல் இடப்பட்ட கேள்விகளையும் கேட்கவும்.

ஒரு மீனின் **படம் வரைக.** குழந்தைகள் அதைப் பார்த்து வரையட்டும்.



- பெரிய பிள்ளைகள் ஒரு படகின் படத்தை வரைய விரும்பலாம்.



- பிள்ளைகள் தாங்கள் வரைந்த படத்தை ஆராதனையின் போது பெரியவர்களுக்குக் காட்டி, மனிதனைப் பிடிக்கும் புதிய வேலையை தேவன் நமக்குத் தருவதைக் குறித்து விளக்கலாம்.

இயேசுவைப் பின்பற்றும்படி மக்களுக்கு உதவி செய்து, விசுவாசிகள் எவ்வாறு மனிதர்களைப் பிடிக்கிறார்கள் என்பதற்கு வேறு உதாரணங்களைக் கூறுமாறு பிள்ளைகளைக் கேட்கவும்.

**கவிதை :** ரோமர் 8:35-39 லிருந்து ஐந்து சிறுவர்கள் ஆளுக்கு ஒரு வசனமாய் ஒப்புவிக்கட்டும்.

இந்தக் கதையில் வரும் இயேசுவின் வார்த்தைகளை உபயோகித்து பெரிய பிள்ளைகள் கவிதையோ பாடலோ எழுதட்டும்.

யோவான் 15:16 ஐ **மனப்பாடம் செய்க.**

**ஜெபம் :** பிதாவாகிய தேவனே, உமது சீஷர்களாக எங்களைத் தெரிந்து கொண்டதற்காக நன்றி செலுத்துகிறோம். நாங்கள் உமக்குக் கீழ்ப்படிந்து, நீர் கூறிய படியே கனி கொடுக்கிறவர்களாக இருக்க விரும்புகிறோம்.

உமது அழைப்பை வெகு சீக்கிரமாக ஏற்று மனிதர்களைப் பிடிக்கக் கற்றுக் கொள்ளுமாறு உதவும்.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied.

Download from www.Paul-Timothy.net